**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**<u>PW-3 – OS. No.113/2023</u>**

2025 ம் ஆண்டு ஜீலை மாதம் 22-ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி திருமதி.V.ஸ்ரீவித்யா, எம்.எல்., முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.சிவக்குமார். | தொழில் : |
| த/பெ. : திரு. | வயது : |
| முகவரி : | மொபைல் எண்: |

**வாதி தரப்பில் சாட்சி-3 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை.**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பு சாட்சி ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**<u>வாதி தரப்பில் சாட்சி-3 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்வதற்கு எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி மோகனசுந்தரம் கேட்டுக் கொண்டதன் பெயரில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் கடன் கேட்பதற்காக பழனிவேலிடம் சென்றார்கள் என்று சொன்ன போதிலும் எந்த தேதியில் சொன்னார்கள் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

2.பழனிவேல் தான் கடன் கேட்டார் மோகனசுந்தரம் வீட்டில் வைத்து கடன் கொடுத்தார்கள் அதுதான் தெரியும். இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கும் மூன்றாம் நபர் பிரமாண வாக்குமூலத்தில் என்னை அணுகி சொத்தை விற்பனை செய்வதற்காக சொன்னார்கள் என்று தாக்கல் செய்திருக்கும் பிரமாண தவறான சந்ததிகளை கொண்டது. அந்த மூன்றாம் நபர் பிரமாண வாக்குமூலத்தில் இருக்கும் கையெழுத்து என்னுடையதே கிடையாது.

3.மூன்றாம் நபர் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரி என்னுடைய தான். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் பிரமாண வாக்குமூலத்தில் ஆதார் கார்டு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் தாக்கம் செய்திருக்கும் மூன்றாம் தரப்பு நபரின் வாக்குமூலத்தில் இருக்கும் விவரங்கள் நான் தாக்கல் செய்தது தான் என்று சொன்னால் சரியல்ல.

4.வாதி மோகனசுந்தரம் எனக்கு நெருங்கிய நண்பர் என்று சொன்னால் சரிதான். வாதி மோகனசுந்தரம் பனியன் கம்பெனி வைத்து நடத்திக் கொண்டு வந்தார். பணம் வட்டிக்கு கொடுத்து வாங்கும் தொழில் எதும் அது அவர் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் கணவர் எனக்கு தெரிந்தவர்தான் மோகனசுந்தரம் தான் என் நண்பர் ஆவார். பிரதிவாதியின் கணவர் மோகனசுந்தரத்திடம் கடன் வாங்கி அதனை முழுமையாக செலுத்தி விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

5.இந்தப் பிரதிவாதி மோகனசுந்தரத்திடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல என் முன்னாடி தான் வாங்கினார். வா.த.சா–1 ஆவணத்தில் உள்ள எழுதியது மட்டும் என்று போடப்பட்டு இருக்கும் கையெழுத்து என்னுடையது தான். மூன்றாம் நபர் வாக்குமூலத்தில் இருக்கும் கையெழுத்து என்னுடையது அல்ல.வாதசா–1 ஆவணத்தில் முத்திரை வில்லையின் மீது இருக்கும் கையெழுத்து ஒரு நிறம் என்றும் மற்ற எழுத்துக்கள் வேறொரு மையினாலும் நிரப்பப்பட்டவை போல் இருக்கின்றது என்று சொன்னால் ஆமாம்.

6.நானும் என் நண்பர் மோகனசுந்தரமும் சேர்ந்து போலியாக தயாரிக்கப்பட்ட ஒரு பிராமிசரி நோட்டை வைத்துக்கொண்டு பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்று கெட்ட நோக்கத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரி அல்ல. பிரதிவாதி நம்பிக்கையின் பெயரில் கொடுத்த ஆவணங்களை வாதியுடன் சேர்ந்து கொண்டு நான் இந்த வழக்கில் பொய்யாக வாதிகளாதரவாக

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்று சொன்னால் சரி அல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.

முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

PW-2 – OS. No.113/2023

2025 ம் ஆண்டு ஜீலை மாதம் 22-ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி திருமதி.V.ஸ்ரீவித்யா, எம்.எல்., முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு. பழனிவேல் | தொழில் : |
| த/பெ. : திரு. | வயது : |
| முகவரி : | மொபைல் எண்: |

**வாதி தரப்பில் சாட்சி-2 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை.**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பு சாட்சி ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**வாதி தரப்பில் சாட்சி- வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1.இந்த வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு ஆணை ஏதும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். வாதி மோனசுந்தரம் பனியன் தொழில் செய்து வருகிறார். அவர் வட்டிக்கு பணம் கொடுத்து வாங்கும் தொழில் செய்து வரவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி வந்த பணம் கேட்டதாக சொல்லி என்ன பதிலும் என்ன தேதியில் எத்தனை மணிக்கு வந்த பணம் கேட்டு வாங்கினார்கள் என்ற விவரம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. நான் தான் சிபாரிசு செய்து பணம் வாங்கி கொடுத்த விவரத்தை நான் வாதியின் பிராதில் சொல்லவில்லை என்றால் நான் தான் சிபாரிசு செய்தேன். வாதி மோகனசுந்தரம் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் ஆமாம். வாதி மோகனசுந்தரமும் எனக்கு முன்பு சாட்சி சொல்லி சென்ற சிவகுமாரும் ஒன்றாக சேர்ந்து கொண்டு

பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

3. இந்தப் பிரதிவாதிக்கு வாதி மோகனசுந்தரத்தையும் சாட்சி சிவக்குமாரையோ அல்லது என்னையோ யார் என்றே தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் தான் அவரை அழைத்து சென்று பணம் வாங்கி கொடுத்தேன். வாதி கேட்டுக் கொண்டதற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4.10.03.2020 தேதி அன்று பிரதிவாதி மோகனசுந்தரத்திற்கு பணம் கொடுத்தது விவரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் ஆமாம் தெரியும். ஆனால் அதற்கு நான் சாட்சி கையெழுத்து எல்லாம் செய்யவில்லை. உண்மையில் அப்படி நடந்திருந்தால் நான் சாட்சிக என்று போட்டிருப்பேன் என்றும் சொன்னால் சரியில்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.